மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் – கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி இணைந்து நடத்திய

# ‘தமிழ்க்கூடல்’ நிகழ்வு! ‘சங்க இலக்கியத்தில் சிறுதானியங்கள்’ கருத்தரங்கம்!

## உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா தலைமை!

மதுரை, டிச.7-

மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியும் இணைந்து நூற்று எண் பத்து எட்டாவது ‘தமிழ்க் கூடல்; நிகழ்ச்சியை 05.12.2025 அன்று முற்பகல் 10.30 மணிக்கு உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகக் கூட்ட அரங்கில் நடத்தியது. இந்நிகழ்ச்சியை உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வுவளமையர் முனைவர் ஜ.ஜான்சிராணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.



இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர்ஃஇயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள்; தலைமை தாங்கினார்.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் நுண்ணுயிரியல், உணவியல் மற்றும் ஊட்டச்சத்துத் துறைகளின் தலைவரான பேராசிரியர் பெரு.வீர. கோபிமணிவண்ணன் அவர்கள் ‘சங்க இலக்கியத்தில் சிறுதானியங்கள்’ எனும் தலைப்பில் தமிழ்க்கூடலுரை நிகழ்த்தினார்;. அவர் தம் உரையில், “;சர்வதேச சிறுதானிய ஆண்டாக 2023ஆம் ஆண்டை ஐ.நா.சபை அறிவித்தது. சிறுதானியத்திற்கான ஒரு திட்டத்தை உருவாக்கினேன். இத்திட்டத்திற்காக 10 இலட்சத்திற்கான நிதி பெற்றேன். மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி சிறுதானியத்தில் என்னென்ன செய்யலாம் என்பதற்கான பயிற்சியை பேராசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசின் இந்திய பால்வளக் குழுமத்தின் பிரதிநிதியாக இருக்கிறேன். அவர்கள் சார்ந்த கருத்துகளை மத்திய அரசுக்குத் தெரிவிக்கிறேன். சிறுதானியம் என்று பெயரிடப் பட்டாலும் இதுதான் நமக்கான உணவாக இருக்கிறது. நமது பாரம்பரிய உணவிலிருந்து நீங்கிக் கொண்டு வருகிறோம். கம்பு, கேப்பை, வரகு, தினை, சாமை இவற்றை நவதானியங்கள் என்று கூறுவர். உணவே ஒழுக்கம் சார்ந்த கல்வியை உருவாக்கும். நாம் சாப்பிடும் உணவு சரியானதாக இருக்கவேண்டும். மன்னர் கல்லூரியில் மாணவர்கள் தயாரிக்கின்ற சிறுதானிய உணவு நாள் தோறும் விற்கப்படுகின்றது. அவர்களுக்கு ஊதியமும் கொடுத்துவருகிறோம். இதன் மூலம் தொழிலை மாணவர்கள் கற்கவும் பயனடையவும் வழிவகை செய்கிறோம். இம்முயற்சியை ஐம்பதாயிரம் செலவில் மாணவர்களை இயக்குநராக வைத்து நடத்துகிறோம்” என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்குத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி மாணவர்கள், திருமங்கலம் அன்னை பாத்திமா கல்லூரி மாணவர்கள், உலகத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள்; என அறுபதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு மேலும் வித்திடும் வகையில்

# மதுரை மேலமடை சந்திப்பு சாலையில் புதிய மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் என பெயர் சூட்டல்!


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.7-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரையில் உள்ள திருநகர் மேலமடை சந்திப்பில் ரூ.150.28 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தை இன்று (07.12.2025) திறந்து வைக்கிறார். இந்த மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் என்று பெயர் சூட்டப்படும் என அறிவித்துள்ளார்.**

மதுரை தொண்டி சாலை அண்ணா பேருந்து நிலைய சந்திப்பில் தொடங்கி ஆவின் சந்திப்பு, மேலமடை சந்திப்பு வழியாக மதுரை சுற்றுச் சாலையில் இணைந்து அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டம் பூவந்தியில் முடிவடைகிறது. இச்சாலை மதுரை மாவட்டத்தையும், சிவகங்கை மாவட்டத்தையும் இணைக்கும் முக்கிய மாநில நெடுஞ்சாலை ஆகும். இச்சாலையில் அதிகமான கல்வி நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ளது,

மேலும் போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ள காரணத்தினால் இப்பகுதியில் உள்ள மூன்று சந்திப்புகளிலும் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை நிலவிவந்தது. பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை போக்கும் வகையிலும் நெரிசலின்றி வாகனங்கள் செல்லும் வகையிலும் இந்த மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தால் மதுரை தொண்டி சாலை, கோரிப்பாளையம் முதல் சுற்றுச் சாலை வரை போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும்.

950 மீட்டர் நீளமுள்ள இந்த முக்கியமான மேம்பாலத்திற்கு சிவகங்கை மாவட்டத்தில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்து வெள்ளையரிடம் இருந்து சிவகங்கையை மீட்டு சிறப்பான ஆட்சி புரிந்த வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! நெல்லை மத்திய மாவட்டம்–

# மானூரில் இன்று பொதுக்கூட்டம்! ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

## சூர்யா வெற்றிகொண்டான் பங்கேற்பு! மு. அப்துல் வகாப் எம்,எல்,ஏ, தலைமை!

நெல்லை.டிச.7-

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் கங்கைகொண்டானில் இன்று(07122025 )

ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப்

தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் கங்கை கொண்டானில் இன்று (7ம் தேதி ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் முத்தையா, மாயாண்டி, லயன் மந்திரம்பிள்ளை, பரமசிவம், செல்லப்பா, சுடலைமுத்து, சித்திரைவேல், இசக்கி முத்து, பீர் மணி, அண்ணாதுரை, ராசையா, செல்வி ராமசாமி, மந்திரம், அடைக்கலம், இசக்கி பாண்டி, இசக்கி பெருமாள், அருணாசலம், குழந்தை, ராஜபதி கனகராஜ், சங்கரன், சங்கரன், கணேசன், சண்முகவேல், மாடசாமி குட்டி, கோபால் ஆசாரி, ஆறுமுகம், உத்திர வாசகம், அப்பு என்ற ஆறுமுகம், கேபிள் வெள்ளத்துரை, பெரியசாமி, இசக்கி, நேதாஜி நகர் இசக்கி, காட்டு ராஜா, ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் ஆ.க.மணி, மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள் மணி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை மத்திய மாவட்ட இலக்கிய அணி சின்னத்துரை, கழகப் பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, நெல்லை ரவி, சி.பாராவணன், நெல்லை மணி ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெற்றிகொண்டான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாநில சிறுபான்மை நல உரிமைபிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர்கள் என்.மாலைராஜா, ச.முத்துச் செல்வி, தென்காசி மாவட்ட முன்னாள் செயலாளர் ஆ.துரை, தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன்,

மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட மருத்துவ அணி ரவி, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன், முன்னாள் துணை மேயர் முத்து ராமலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், கிரிஜா குமார், மாநகர துணை செயலாளர் மூளிகுளம் பிரபு, தச்சை பகுதி பொறுப்பாளர் பூ.சுப்பிரமணியன்,

உள்பட மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) கழக நிர்வாகிகள், யகழகத் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் எஸ்.ஏ. பிரபா அருள் மணி, சமூக வலைத்தளம் களப்பணியாளர் கீர்த்தி ஆகியோர் நன்றியுரை யாற்றுகின்றனர்.

கூட்ட ஏற்பாடுகளை மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி செய்துள்ளார்.

---

“ஆஃப்டர் நூன்” – ‘பிற்பகல்’ நாளிதழ்களின் ஆசிரியர்

# எம்.என்.சுதன் அப்பாதுரை மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.7-

**“ஆஃப்டர் நூன்” மற்றும் ‘பிற்பகல்’ ஆகிய இதழ்களின் ஆசிரியர் எம்.என்.சுதன் அப்பாதுரை அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில்,

“கோவை பத்திரிகையாளர்கள் சங்கத் தலைவரும் – “ ‘Afternoon’ மற்றும் ‘பிற்பகல்’ ஆகிய நாளிதழ்களின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளருமான எம்.என்.சுதன் அப்பாதுரை அவர்கள் இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து வருந்துகிறேன்.

சுதன் அப்பாதுரை அவர்கள் பத்திரிகைத் துறையில் நீண்ட நெடிய அனுபவம் கொண்டவர். அவரது மறைவு பத்திரிக்கை உலகிற்கு ஓர் இழப்பு எனின் அது மிகையல்ல.

அன்னாரை இழந்து துயருறும் – அவரது புதல்வர்கள் ஆதம் அப்பாதுரை, டேவிட் அப்பாதுரை உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

---

8.12.2025 மாலை 4.00 மணியளவில், மதுரையில்

# “மதச் சார்பின்மை” எனும் தலைப்பில் “கருத்தரங்கம்”

## “மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி” கட்சிகளின் வழக்கறிஞர் அணி சார்பில் நடைபெறுகிறது

வருகிற 08.12.2025 திங்கட்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில், மதுரை பாண்டி கோவில் பின்புறம், நான்கு வழி சாலை, பாண்டியன் நகர், கதவிலக்கம் 27/7 மற்றும் 27/8 ல் அமைந்துள்ள ‘துவரகா பேலஸில்‘ ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’ கட்சிகளின் வழக்கறிஞர் அணி சார்பில் “மதச் சார்பின்மை” என்ற தலைப்பில் “கருத்தரங்கம்” நடைபெறும்.

இதில் தி.மு.கழகத்தின் சார்பில் அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி – காங்கிரஸ் கட்சியின் சார்பில் வழக்கறிஞர் ஆர். மாரியப்பன் ம.தி.மு.க. சார்பில் வழக்கறிஞர். இரா.செந்தில் செல்வன் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எஸ்.பாரதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வழக்கறிஞர் கே. கே.சாமி – விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வழக்கறிஞர். த.பார்வேந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

இக்கருத்தரங்கில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் – தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி**
**வழக்கறிஞர் அணி**

---

திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர்

# பூண்டி கே.கலைவாணன் சகோதரி திருமதி பா.கலைவாணி மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.7-

**திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணனின் சகோதரி திருமதி பா. கலைவாணி அம்மையார் அவர்கள் நேற்று (6.12.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

தகவல் அறிந்து துயருற்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில்,

“மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன், (நினைவில் வாழும்) பூண்டி கே.கலையரசன் ஆகியோரின் சகோதரியும் – (நினைவில் வாழும்) ஜி.பாண்டி துரை அவர்களின் துணைவியாருமான திருமதி. பா.கலைவாணி அம்மையார் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

கலைவாணி அம்மையார் அவர்களின் மறைவால் ஆற்றொணாத் துயருறும் அவரது புதல்வர்களான சுந்தரேஷ்வரன், விக்னேஷ்வரன், சகோதரர் – மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும் – அன்னாரின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

---

துணை முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி

# தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மதிய உணவு!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் வழங்கினார்!

நெல்லை, டிச.7-

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் களப்பணி ஒருங்கிணைப்பாளர் நிஜித் தலைமையில் 05.12.2025, வெள்ளிக்கிழமை அன்று மதியம் 12.30 மணியளவில் மேலகாட்டுவிளை பகுதியில் அமைந்துள்ள அனுக்கிரகா டிரஸ்ட் இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு அனுக்கிரகா தொண்டு நிறுவனத்தில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மதிய உணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் த.ஜீவா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஐ.குமரி மணிமாறன், துணை ஒருங்கிணைப்பாளர்கள் ம.ஜெமிலா ஆன்றனி, மி.ஆஸ்டின் பெனட், ஆ.பீட்டர், ஒன்றிய பொறுப்பாளர் ஜெ.மிலன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.அகஸ்தீசன், அ.அருண்காந்த், கோ.ராதா கிருஷ்ணன், வட்ட செயலாளர் த.ஜெயகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் களப்பணி ஒருங்கிணைப்பாளர் நிஜித் தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் அனுக்கிரகா தொண்டு நிறுவனத்தில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மதிய உணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் த.ஜீவா, ஐ.குமரி மணிமாறன், ம.ஜெமிலா ஆண்டனி, மி.ஆஸ்டின் பெனட், ஆ.பீட்டர், ஜெ.மிலன், வி.அகஸ்தீசன், அ.அருண்காந்த், கோ.ராதா கிருஷ்ணன், த.ஜெயகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---


# நம் முகமும் முகவரியும்

தலைமைக்கழக அனுமதிபெற்றது

தலைமைக்கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக்கழக செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளி மாநில அமைப்பாளர்கள், அனைத்து அணிச்செயலாளர்கள், இளைஞர் அணிச்செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய / நகர / பகுதி / பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சொற்பொழிவாளர்களின் அலைபேசி எண்களுடன் கூடிய முகவரிநூல் வெளிவந்துள்ளது.

கழக நிர்வாகிகளிடம் இருக்க வேண்டிய கழக அலுவலகங்களில் இருந்திட வேண்டிய மிக மிக முக்கியமான முகவரி நூல் ...



பக்கம் 536
விலை 500/-

நூலினை வங்கி மூலம் பெற :
அ. கூத்தரசன்
A/c. No. : 1262101017751
IFSC : CNRB0001262
கனரா வங்கி, கூடலூர் பிராஞ்ச்
கோவை – 20
செல் : 94863 24163

தொடர்பு கொள்ள
திருப்பூர் கூத்தரசன்
அன்னை அஞ்சுகம் பதிப்பகம்
153/1, சாமையன் நகர்,
எஸ்.ஆர்.கே.வி. அஞ்சல்
பெரியநாயக்கன்பாளையம்
கோவை – 641 020
செல் : 94863 24163